மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அ.வ.எண்.18/2021

பெயர் – மோகன்ராஜ் (பி.வா.சா.1)

நாள் – 03.04.2024

வாதி தரப்பில் செய்யப்பட்ட கு.வி.

எனது வீட்டிற்கான சர்வே எண் என்ன என்றால் பழைய சர்வே எண்.393/10, புதிய சர்வே எண்.393/29A ஆகும். என் வீட்டிற்கு கிழக்குபுறத்தில் யாருடைய வீடு உள்ளது என்றால் ஜெயகுமாருக்கு பாத்தியப்பட்ட காலியிடம் உள்ளது. அந்த காலியிடத்திற்கான சர்வே எண் என்ன என்றால் தெரியாது. அந்த காலியிடத்திற்கான சர்வே எண்.393/11 என்றால் சரிதான். கனகலட்சுமியின் வீடு முன்பு காலியிடமாக இருந்தது என்றால் வீடு இல்லை. கனகலட்சுமிக்கு பாத்தியப்பட்ட இடம் முன்பு காலியிடமாக இருந்து தற்போது வீடு கட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதில் முதலில் செட் ஏற்படுத்தி பட்டா வாங்கி தற்போது காலியிடத்தில் செடிகள் வைத்துள்ளார்கள். சர்வே எண்.393/11ல் முன்பு வீடு இருந்து தற்போது தான் காலியிடமாக உள்ளது என்றால் சரியல்ல. கனகலட்சுமியின் வீட்டிற்கு கிழக்குபுறம் தென்வடல் தெரு உள்ளது என்றால் சரிதான். அது ஊர் பொது பாதையாகும். என் வீடு வடக்கு பார்த்த வாசல் கொண்டது என்றால்சரிதான். என் வீட்டிற்கு மேற்குபுறம் எனக்கு பாத்தியப்பட்ட காலியிடம் உள்ளது என்றால் சரிதான். எனக்கு பாத்தியப்பட்ட காலியிடத்திற்கு மேற்குபக்கத்தில் ராஜ் நாயக்கர் என்பவருக்கு பாத்தியப்பட்ட வீடு உள்ளது என்றால் சரிதான். அது பழைய வீடாகும். அந்த சொத்திற்கான சர்வே எண்.393/9 என்றால் சரிதான். ராஜ் நாயக்கருக்கு பாத்தியப்பட்ட வீட்டிற்கு மேற்குபுறத்தில் சர்வே எண்.393ல் மேற்குபுற கடைசியில் ராஜ் நாயக்கருக்கு பாத்தியப்பட்ட பட்டாசு தொழிற்சாலை இருந்தது என்றால் அது தொழிற்சாலை கிடையாது 10க்கு 10 அறையில் பட்டாசு செய்வதற்கான குழாய் செய்து கொடுத்தார்கள். ராஜ் நாயக்கரின் வீடு மற்றும் எனது வீடு கட்டி எவ்வளவு காலம் ஆகிறது என்றால் எனது வீடு 1965ம் ஆண்டில் தகர வீடாக இருந்தது. 1978ல் ஓட்டு வீடாகவும், அதற்கு பிறகு 1982ல் காரை வீடாகவும் கட்டப்பட்டது. ராஜ் நாயக்கரின் வீடு 1988ம் ஆண்டிற்கு மேல் கட்டப்பட்டது. ராஜ் நாயக்கரின் பயர் ஓர்க்ஸ் அலுவலகம் 1995ல்

கட்டப்பட்டிருக்கும். வாதி சுந்தர்ராஜீன் வீட்டிற்கு மேற்குபுறம் தென்வடல் தெரு உள்ளதா என்றால் தெரு கிடையாது. அது ராஜ் நாயக்கரின் தனிப்பட்ட பாதையாகும். வாதியின் வீட்டிற்கு மேற்குபுறத்தில் தென்வடல் தெரு தான் உள்ளது என்றாலும் வழக்கிற்காக ராஜ் நாயக்கரின் தனிப்பட்ட பாதை உள்ளதாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி வீட்டிற்கு மேல்புறத்தில் உள்ள பாதைக்கு மேற்கே ஐயப்ப நாயக்கருக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது என்றால் மேற்குபுறத்தில் முருகதாஸ்க்கு பாத்தியப்பட்ட காலியிடம் தான் உள்ளது. நான் ஐயப்ப நாயக்கரிடமிருந்து கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் இல்லை. என் வீட்டிற்கு மேற்குபுறத்தில் உள்ள ராஜ் நாயக்கர் பயர் ஓர்க்ஸிற்கு செல்லுவதற்கு வாதியின் வீட்டிற்கும், பிரதிவாதியின் வீட்டிற்கும் இடையே உள்ள கிழமேல் பாதையை பயன்படுத்தி தான் சென்று வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் என் வீட்டிலிருந்து ஊருக்குள் செல்ல வேண்டுமென்றால் வாதி வீட்டிற்கும் என் வீட்டிற்கு இடையே உள்ள பாதையை பயன்படுத்தி தான் செல்ல முடியும் என்றால் கிடையாது. நான் எங்களுக்கு பாத்தியப்பட்ட பாதையில் தான் சென்று வருகிறேன். என் வீட்டிற்கும் கிழமேல் பாதைக்கும் வடபுறத்தில் வாதியின் வீடு அமைந்துள்ளது என்றால் சரிதான். வாதியின் வீடு கிழக்கு பார்த்த வாசல் கொண்டது என்றால் சரிதான். வாதியின் வீட்டிற்கு முன்பாக தென்வடல் தெரு உள்ளது என்றால் சரிதான். வாதி வீடு கட்டி சுமார் 50 ஆண்டுகள் இருக்குமா என்றால் இல்லை சுமார் 32 வருடங்கள் ஆகிறது. 1992, 1993ல் வந்திருப்பார்கள். வாதியின் வீட்டு தென்புற சுவற்றில் கிழமேலாக எட்டு ஜன்னல்கள் உள்ளன என்றால் 6 ஜன்னல்கள் தான் உள்ளன. அந்த ஜன்னலுக்கு மேலே சன்சே 1 1/2 அடி நீளத்தில் உள்ளது என்றால் சரிதான். என் வீட்டிற்கும் வாதி வீட்டிற்கும் இடையே உள்ள பாதையின் தென்வடல் அளவு 12 அடி அகலம் என்றால் சரிதான். வாதி அவரது வீட்டின் தென்பகுதிக்கு செல்ல வேண்டும் என்றால் பிராது இரண்டாவது அயிட்ட சொத்து வழியாக தான் செல்ல முடியும் என்றால் எங்களது அனுமதியின் பேரில் அந்த பாதை வழியாக வருகிறார். எங்கள் வீட்டிற்கும், வாதியின் வீட்டிற்கும் இடையே உள்ள பாதை பொது பாதை என்றாலும், எங்களிடம் அனுமதி பெற்று பயன்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என்றாலும் சரியல்ல. வாதிகள் அவரது மொத்த இடத்திலுமே வீடு கட்டிவிட்டார்கள். முதலில் வாதிகள் எங்களுடன் நல்ல

நட்புடன் இருந்ததால் மராமத்து வேலை செய்வதற்காக எங்கள் வீட்டிற்கு வடக்குபுறத்தில் உள்ள அந்த பாதையை பயன்படுத்தினார்கள். அதில் நாங்கள் 12 அடி அகலத்தில் சிமெண்ட் போட்டு வைத்திருந்தோம். அதனை வாதிகள் இடித்ததால் காவல் துறையில் புகார் செய்தோம். வாதிகள் எங்களிடம் அனுமதி பெற்று தான் தென்புற சுவற்றிற்கு சென்றதாக ஆவணங்களை எதையாவது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாதிகள் சிமெண்டை உடைத்துவிட்டதாக காவல் துறையில் புகார் கொடுத்தேனா என்றால் புகார் கொடுத்தேன். அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஆனால் என்னிடம் உள்ளது. வாதிகள் பொதுபாதையை உரிமையோடு பயன்படுத்தி வருகிறார்கள் என்றாலும், எங்களுடைய அனுமதி பெற்று பயன்படுத்தவில்லை என்றாலும், வழக்கிற்காக அனுமதி பெற்று பயன்படுத்தி வருவதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் வீட்டிற்கு முன்பாக சிமெண்டால் எந்த அமைப்பும் அமைக்கவில்லை என்றாலும், அதனை வாதிகள் சேதப்படுத்தவில்லை என்றாலும், அது சம்மந்தமாக காவல் துறையில் நான் புகார் அளிக்கவில்லை என்றாலும் சரியல்ல. வாதிகளுக்கு அவரது தென்புற சுவற்றிலிருந்து 1 1/2 அடி இடம் உள்ளது என்றால் சரியல்ல. என் வீட்டிற்கும் வாதிகளின் வீட்டிற்கும் இடையே உள்ள பாதை அரசு ஆவணங்களில் நத்தம் என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதற்கான ஆவணத்தை நான் தாக்கல் செய்துள்ளேன். பிராது 2 வது அயிட்ட சொத்து நத்தம் என்பதால் சர்வே எண் எதுவும் வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. அது சர்வே எண்.393 ல் சேர்ந்ததாகும். என் வீட்டிற்கும், வாதிகள் வீட்டிற்கும் இடையே உள்ள பிராது பாதையில் தண்ணீர் குழாய் பதிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த தண்ணீர் குழாயானது எங்களது சொந்த செலவில் பதிக்கப்பட்டது. தண்ணீர் குழாயானது ராஜ் நாயக்கரின் வீடு வரை செல்கிறது என்றால் சரியல்ல. சர்வே எண்.393/10 ல் எனக்கு 10.4 சென்ட் நிலம் பூர்விகமாக பாத்தியப்பட்டதாக ஆவணங்கள் ஏதையாவது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அசல் உயில் ஆவணம் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த ஒப்புதல் மற்றும் மனுவையும், மாவட்ட ஆட்சியர் அளித்த ஒப்புதலுக்கான நகலையும் தாக்கல் செய்துள்ளேன். 10.4 சென்ட் நிலம் பூர்விகமாக பாத்தியப்பட்டதாக எனது முன்னோர்கள்

பெயரில் ஏற்பட்ட பட்டா அல்லது கிரைய பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். ஆனால் அதில் 1.4 சென்ட் தவறுதலாக உள்ளது. என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை தான் பூர்விகமாக எங்களுக்கு எங்களது வீடு பாத்தியப்பட்டது என்பதை காண்பிப்பதற்காக தாக்கல் செய்துள்ள ஆவணம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணப்படி எங்களுக்கு 60 சதுர மீட்டர் நிலம் தான் பாத்தியம் என்று உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட சொத்து மட்டும் தான் எங்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1ல் கண்ட சொத்து எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது என்பதால் தான் எனக்கு உயில் ஆவணம் பிறப்பித்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த உயில் ஆவணத்தை தான் பி.வா.சா.ஆ.4 ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1ல் உள்ள சொத்து தான் பி.வா.சா.ஆ.4 ஆவணமான உயில் ஆவணத்தில் முதலாவது சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்களுக்கு பூர்விகமாக 1.4 சென்ட் நிலம் தான் பாத்தியப்பட்டது என்றாலும், அதை தான் தவறுதலாக 10.4 சென்ட் நிலம் என உயில் ஆவணத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1957ம் ஆண்டிலிருந்து வீட்டு வரி ரசீது பஞ்சாயத்திலிருந்து கொடுக்கப்பட்டுள்ளது. எனது தாத்தா, பெரியப்பா, எங்க அப்பா பெயருக்கு ஏற்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் 1வது அயிட்ட சொத்திக்கு வடக்கு மாலாக எங்களுக்கு பாத்தியப்பட்ட 14 அடி கிழமேல் பாதை உள்ளதாக உள்ளது என்றால் சரிதான். 14 அடி கிழமேல் பாதை எங்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்பதை நிரூபிப்பதற்காக ஆவணங்களை எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அதற்கான ஆவணங்களே கிடையாது. வீட்டு வரி ரசீது, மின் கட்டண ரசீது தான் உள்ளது. 14 அடி கிழமேல் பாதையை தான் வாதி பொது பாதை என இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். எனது தகப்பனார் இருந்த போதே 1991ம் ஆண்டிலேயே வாதிகள் வீடு கட்டி குடியேறிவிட்டார்கள். அப்போதிலிருந்தே அவர்களுக்கு கிழமேல் பாதை தான் பிரதாண பாதையாகும். அவர்களது முன்பாத்தியஸ்தர்களும் அதை தான் பயன்படுத்தினார்கள். பஞ்சாயத்து தேர்தலுக்கு பின்னிட்டு தான் பிரச்சினை ஆனது. 14 அடி பாதையானது எங்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது அல்ல என்பதால் தான் அதற்கான

ஆவணங்கள் எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆனால் அதற்கான ஆவணம் என் வசம் உள்ளது. அதை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். அது பொது பாதை இல்லை என்பதால் தான் இதுவரையிலும் அரசாங்கத்திலிருந்து கான்கீரிட் பாதை எதுவும் அமைக்கவில்லை. ஆனால் வேறு பாதைகளில் அரசாங்கம் கான்கீரிட் பாதை அமைத்துள்ளார்கள். எங்கள் வீட்டிற்கும், வாதிகள் வீட்டிற்கும் இடையே உள்ள கான்கீரிட் பாதை அமைப்பதற்காக பஞ்சாயத்திலிருந்து பலமுறை முயற்சித்தும் நாங்கள் தடுத்ததால் தான் கான்கீரிட் பாதை அமைக்கப்படவில்லை என்றால் சரியல்ல. கிராம நிர்வாக அலுவலர் மற்றும் பஞ்சாயத்து தலைவர் எல்லோரும் சேர்ந்து தான் எங்களுக்கு பாத்தியப்பட்ட பாதையை என்று எழுதிக் கொடுத்துள்ளாரகள். அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.